2008 ஏப்ரல் 11] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

இந்த நோயினுடைய தாக்கம் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன். இது பொன்னகரம் பகுதியிலே கட்டுப்படுத்தப்படுகிறபோது செல்லூருக்கும் பரவுகிறது என்ற ஒரு தகவலும் இருக்கிறது. இது மேலும் பரவக்கூடாது; வீண் பீதிக்கும் மக்கள் ஆளாகவேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. உரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்குமாறு கேட்டு அமைகிறேன்.

4. கவன ஈர்ப்பு

மேட்டூர் அணை திறக்கப்படாததால் ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையிலிருந்து காவிரி தண்ணீர் திறந்து விடப்படாததால், ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. துரைமுருகன்] [2008 ஏப்ரல் 11

அறிக்கை

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், காசிபாளையம் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்வதற்காக மேட்டூர் அணையிலிருந்து *26-3-2008 மாலை 6-00 மணி முதல் 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்ப 31-03-2008 இரவு 8-00 மணி முதல் 800 கன அடியாக தண்ணீரின் அளவு அதிகரித்து கொடுக்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.*

திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழக அரசால் கடந்த 31-1-2008-ல் ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையினுடைய வாசகத்தை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.*

முற்பகல் 11-05

அந்த அரசாணையிலே, மேட்டூர் அணையிலிருந்து சேலம், திருச்சி மாவட்டங்களுக்கு, 17 பழைய கால்வாய்கள்மூலமாகப் பாசனத்திற்காகவும், காவிரி கரையோர மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் 1-2-2008-லிருந்து 12-6-2008 வரை கீழ்க்காணும் அளவுகளிலே தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. முதற்கட்டமாக, மிக வறட்சியாக இருக்கிற காலமான 1-2-2008-லிருந்து 30-4-2008 வரை 90 நாட்களுக்கு 1,800 கன அடி தண்ணீரும், அதற்குப் பிறகு 30-4-2008-லிருந்து 31-5-2008 வரை 1,200 கன அடி தண்ணீரும், அதற்குப் பிறகு மூன்றாவது கட்டமாக, 31-5-2008-லிருந்து 12-6-2008 வரை 1,000 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், இது வறட்சிக் காலமென்பதால், அவ்வாறு தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டுமென்று அரசாணையில் இருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 600 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது; தேவைக்கேற்ப 800 கன அடி தண்ணீராக அளவு அதிகரிக்கப்பட்டு வருகிறது என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அரசாணையிலே 1,800 கன அடி

2008 ஏப்ரல் 11] [திரு. விடியல் எஸ். சேகர்]

தண்ணீரைத் திறந்துவிடவேண்டும் என்றிருக்கிறது. உங்கள் பொதுப் பணித் துறை சார்பிலே போடப்பட்டிருக்கிற அரசாணையிலே 1,800 கன அடி தண்ணீரைத் திறந்துவிடவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், திறந்துவிடப்பட்டிருக்கின்ற தண்ணீரினுடைய அளவு 600 கன அடிதான்.

அதுவும் குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, சாயக் கழிவாலே, தோல் கழிவாலே பாதிக்கப்பட்டது அப்பகுதி. தந்தை பெரியார் அவர்கள் நகராட்சித் தலைவராக இருந்தபோது, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தி, அன்றைக்கே பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நகராட்சியை இன்றைக்கு மாநகராட்சியாக்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள் நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட மாநகராட்சி மக்கள் இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இது ஈரோடு மாவட்டத்திற்குமட்டுமான பிரச்சினையில்லை. ஈரோடு, சேலம், திருச்சி போன்ற மாவட்டங்களுக்கும், கரையோர மாவட்டங்களாக இருக்கிற நாமக்கல், கரூர் மாவட்டங்களுக்கும் இருக்கிற பிரச்சினை. இங்கிருந்துதான் திருப்பூர் L & T நிறுவனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இங்கிருந்துதான் பொன்னி சுகர்ஸ் நிறுவனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இங்கிருந்துதான் நாமக்கல், கரூர் மாவட்டங்களுக்குத் தண்ணீர் செல்கிறது. எனவே, இந்த அரசாணை இருக்கிறபோது, தஞ்சையிலே, திருச்சி மண்டலத்திலேயிருக்கிற பொறியாளர் oral orders-ஆகச் சொல்லி, அடிக்கடி தண்ணீரைக் குறைத்துவிடுகிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள், இதைச் சிறப்பாகக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, ஈரோடு மாநகராட்சி மட்டுமல்ல, ஈரோடு மாநகராட்சியைச் சுற்றியிருக்கிற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விடியல் எஸ். சேகர், சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவையையும் கருத்தில்கொண்டு, அரசாணைப்படி 1,800 கன அடி தண்ணீரைத் திறந்துவிட்டு, ஈரோடு மாவட்ட மக்களுடைய தாகம் தீர்க்க வேண்டுமென்று, அவைத் தலைவர்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர் அவர்கள், ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி நகராட்சி, வீரப்பன்சத்திரம் நகராட்சி, காசிப்பாளையம் நகராட்சி போன்ற பகுதிகளிலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று 28-3-2008 அன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பே, 26-3-2008 அன்றே, குடிதண்ணீருக்காக, மாலை 6-00 மணி முதல் 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மேலும், தேவைக்கேற்ப 31-3-2008 இரவு 8-00 மணி முதல் 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. இப்போது தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற அரசாணை, பாசனத்தோடு சேர்ந்தது. இப்போதும் திரு. சேகர் அவர்களுக்குச் சொல்கிறேன், இந்த மூன்று ஊர்களுக்கு காசிப்பாளையம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் தேவையென்றாலும், குடிநீரைப் பொறுத்தவரையில், நாங்கள் தண்ணீரைத் திறந்துவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம், பிரச்சினையில்லை. காரணம், உங்களுடைய வாழ்த்துகளால் இன்றைக்கு மேட்டூர் அணை ஐந்தாவது முறையாக நிரம்புகின்ற அளவிற்கு, 98 அடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

5. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுவின் தலைவர்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 39 முதல் 46 வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்